**Kanton St.Gallen**
**Amt für Volksschule**

பெற்றோருக்கு
தமிழ்

# பிரைமரி ஸ்கூல் முக்கிய விவரங்கள் சுருக்கமாக

தமிழ் – Tamil



**தொடக்கப் பள்ளியில் வருகை கட்டாயமானது, அது பதினொரு பள்ளி ஆண்டுகளை உள்ளடக்கியதாகும். தொடக்கப் பள்ளி நர்சரி பள்ளி, தொடக்கப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆகிய மூன்று நிலைகைளைக் கொண்டுள்ளது.**

கிண்டர்காரடனில் சேரும்போது குழந்தைகளுக்கு சாதாரணமாக நான்கு வயது இருக்கும். பள்ளி ஆரம்பிப்பதை பற்றிய முக்கிய தகவல்களை நீங்கள் உங்கள் வீட்டிலேயே பெறுவீர்கள். நீங்கள் புதிதாக குடியேறி இருந்தால், மேலும் தகவல்களுக்கு உங்கள் முனிசிபாலிட்டியை நேரடியாக அணுகுவது சிறந்தது.


கிண்டர்கார்டனில் நோக்கம் விளையாட்டில் அமைக்கப்பட்டிருக்கும். இது பள்ளியில் பயில்வதற்கான அடிப்படையை அமைக்கும் பிரைமரி பள்ளியில், குழந்தைகள் படிப்பது, எழுதுவது மற்றும் கணிதம் போன்றவற்றை கற்பார்கள், மேலும் பல்வேறு பாடங்களுக்கான வகுப்பிற்கு செல்வார்கள் (மொழிகள், கணிதம், இசை போன்றவை) பாடங்கள், செகண்டரி பள்ளியில் தொடரப்பட்டு இன்னும் ஆழமாக கற்றுக் கொடுக்கப்படும். செகண்டரி பள்ளி, ஜூனியர் ஹை ஸ்கூல் ("ரியல்ஷூல்") மற்றும் ஹை ஸ்கூல் ("செகண்டர்ஷூல்") என்று பிரிக்கப்பட்டுள்ளது.

**அறிவது நல்லது**

கட்டாயப்பள்ளி, செகண்டரி பள்ளி நிலையின் மூன்றாம் வகுப்பை முடிப்பதுடன் முடிகிறது. செகண்டரி பள்ளிப் படிப்பின்போது, இளையவர்கள் ஒரு தொழில் வாழ்க்கையை முடிவு செய்வார்கள் அல்லது அதன் பின்னர் மேல் படிப்பு படிப்பதைப் பற்றி முடிவு செய்வார்கள் குழந்தையில் தொழிலையும் மற்றும் பள்ளியையும் தேர்ந்தெடுப்பது உங்கள் மற்று உங்கள் குழந்தையின் பொறுப்பாகும். வகுப்பு ஆசிரியர் உங்களுக்கு உதவ உங்களுடன் வருவார்.

இந்த தலைப்பில் மேலும் விவரங்களை இங்கு பெறலாம்.

→ www.berufsberatung.ch/migration




## அறிவது நல்லது

கல்வி பள்ளிக்கு முன்பே ஆரம்பிக்கிறது. உங்கள் குழந்தை அவனுடைய/அவளுடைய முதல் வருட வாழ்க்கையில் முக்கிய அனுபவங்களைப் பெறுகிறது மற்றும் அதிகம் கற்றுக் கொள்கிறது. பெற்றோர்கள் எனும் முறையில் நீங்கள் அதை ஆதரிக்க வேண்டும். அவனிடம்/அவளிடம் அடிக்கடி பேசுங்கள், அவன்/அவள் சொல்வதை கவனியுங்கள், அவனை/அவளை உங்கள் தினசரி வாழ்வில் சேர்த்துக்கொள்ளுங்கள், உதாரணமாக அவனை/அவளை உங்கள் சமையலுக்கு உதவ விடுங்கள் ஏறுவது அல்லது பிசைவது போன்றவற்றை உங்கள் குழந்தை முயல்வதற்கு உதவுங்கள், மீண்டும், மீண்டும் அதை செய்யச் சொல்லுங்கள். குடும்பத்திற்கு வெளியேயும் உங்கள் குழந்தைக்கு புது விஷயங்களை உங்களுடனோ அல்லது இதர குழந்தகளுடனோ கற்றுக்கொள்வதற்கு நிறைய சந்தர்ப்பங்கள் உள்ளன. அப்பா அல்லது அம்மா-குழந்தை ஜிம்னாஸ்டிக்ஸ், நூலகத்துக்கு செல்வது அல்லது ஒரு விளையாட்டுக் குழுவை சந்திப்பது போன்றவை பல அற்புதமான அனுபவங்களையும் புதிய தொடர்புகளையும் ஏற்படுத்தும். தற்போது உள்ளூரில் என்ன சலுகை உள்ளது என்பதை உங்கள் முனிசிபாலிடி உங்களுக்கு தருவார்கள்.

இந்த தலைப்பில் உள்ள குறும்படங்களை இங்கே காணலாம்.

→ www.kinder-4.ch

## பள்ளி வருகைப் பதிவு

மாணவர்களின் பல்வேறு தேவைகளை கருத்தில் கொள்வதை அவர்களின் ஆசிரியர்கள் உறுதி செய்வார்கள். இது போதுமானதல்ல, உதாரணமாக, கற்றலில் சிரமம், நடத்தை பிரச்சனை அல்லது அறிவுபூர்வமாக உள்ளவர்கள் இந்த விஷயத்திலும், குழந்தைகளுக்கும், வளர்ந்தவர்களுக்கும், வகுப்பறை பாடங்கள் தவிர, உதவி செய்யப்படுவார்கள். இது பெற்றோர்களை கலந்தாலோசித்த பிறகு இலவசமாக செய்யப்படுகிறது.

சரியான உதவி இருந்தாலும் வழக்கமான பள்ளிகளுக்கு வர இயலாமல் இருக்கும் மாணவர்களுக்கு சிறப்பு பள்ளிகள் இருக்கின்றன. இவை, உதாரணமாக, பேசுவது அல்லது கேட்பதில் சிரமம் உள்ள குழந்தைகள் மற்றும் இளையவர்கள் அல்லது நடத்தையில் மற்றும் கற்பதில் சிரமம் உள்ளவர்களுக்காக செய்யப்படுவது.

## பள்ளியின் நேர அட்டவணை மற்றும் குழந்தை பராமரிப்புச் சேவைகள்

உங்கள் குழந்தை ஒவ்வொரு நாளும் எத்தனை பாடங்களில் பங்கேற்பார் என்பதை பள்ளியின் நேர அட்டவணை குறிப்பிடுகிறது. ஆகஸ்ட் மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமை பள்ளி ஆண்டு தொடங்குவதற்கு முன்பு உங்கள் குழந்தையின் பள்ளியிலிருந்து நேர அட்டவணை உங்களுக்கு கிடைக்கும். தேவைப்பட்டால், நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு நர்சரி கூடுதல் குழந்தை பராமரிப்பை வழங்குகிறது. இது திங்கள் முதல் வெள்ளி

**அறிவது நல்லது**
உங்கள் குழந்தை பள்ளியில் வசதியாக உணரவும் கற்றுக்கொள்வதற்கும் நீங்கள் நிறைய செய்யலாம். அவன் / அவள் பள்ளியில் எப்படி இருந்தார், என்ன செய்தார் என்று பாருங்கள். குழந்தை ஒரு அமைதியான இடத்தில் எந்த தொந்தரவும் இல்லாமல் வீட்டுப்பாடத்தைச் செய்ய முடியும் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்கள் குழந்தை வகுப்பில் விழித்திருக்கவும், சுறு சுறுப்பாக இருக்கவும் அவருக்கு தேவையான உறக்கம் கிடைக்கிறதா என்பதை உறுதி செய்யுங்கள்

கல்வி மற்றும் குழந்தை வளர்ப்பு குறித்த மேலும் தகவல்கள் இந்த இலவச ஆப் பேரண்டுவில் கிடைக்கும்

→ www.parentu.ch/informationsmaterial

வரை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை பள்ளி வாரங்களிலும், பள்ளி விடுமுறை நாட்களில் குறைந்தது எட்டு வாரங்களுக்கும் வழங்கப்படும். மேல்நிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கு, பள்ளி வாரங்களில் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பள்ளியினால் மதிய உணவு வழங்கப்படுகிறது.

### விடுமுறைகள் மற்றும் வராமை
உங்கள் குழந்தை உடல்நிலை சரியில்லாமலோ அல்லது வேறு எந்த முக்கிய காரணத்திற்காகவோ வகுப்புகளுக்கு வர முடியாவிட்டால், பள்ளிக்கூடம் துவங்குவதற்கு முன்பாக நீங்கள் ஆசிரியரிடம் தெரிவிக்க வேண்டும். ஒரு பள்ளி வருடத்திற்கு 13 வாரங்கள் விடுமுறை நாட்கள். உத்தியோகபூர்வ விடுமுறை நாட்களிலும் வகுப்புகள் இல்லை. முக்கிய மத சம்பந்தமான விடுமுறைகளில் மாணவர்களுக்கு விடுமுறை அளிக்க இயலும். ஒரு பள்ளி வருடத்திற்கு இரு அரை நாட்கள் நீங்கள் பள்ளியை விட்டு வெளியே அழைத்துச் செல்லலாம். இந்த காரணத்திற்காக, நீங்கள் முன்னமே ஆசிரியரிடம் தெரிவித்தால் போதுமானது.

### சிறப்பு கற்பிக்கும் நிகழ்வுகள்
கேம்ப்கள், சுற்றுலாக்கள், பள்ளி பயணம் அல்லது ப்ரொஜெக்ட் வாரங்கள் போன்ற நிகழ்வுகள் பாடங்களுக்கு செறிவூட்ட நிகழ்த்தப்படுகின்றன.

### பள்ளிக்குச் செல்லும் வழி
வீட்டிலிருந்து பள்ளிக்கு சென்று மீண்டும் திரும்பும் வழிக்கு, பெற்றோர்களாகிய நீங்களே பொறுப்பு. விதிப்படி, குழந்தைகள் மற்றும் இளையவர்கள் பள்ளிக்கு தனியாகவோ அல்லது அவர்களின் பள்ளித் தோழர்களுடனோ வரலாம்: நடந்து, சைக்கிளில் அல்லது பஸ்சில். போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் பள்ளிக்கு வரும் வழி ஆகியவை பள்ளிப் பாடங்களில் கற்றுத் தரப்படுகின்றது.

### வீட்டுப்பாடம்
பள்ளியில் என்ன பாடம் நடந்தது என்பது பற்றிய அறிவு உங்களுக்கு வீட்டுபாடத்தினால் கிடைக்கிறது. குழந்தைகள் மற்றும் இளையவர்கள் அவர்களின் வீட்டுப்பாடத்தை அவர்களே செய்ய முடியும். கிண்டர்கார்டனுக்கு வீட்டுப்பாடம் கிடையாது. பிரைமரி பள்ளியில் விடுமுறை நாட்களிலும், வார இறுதியிலும் வீட்டுப்பாடம் இல்லை,செகண்டரி பள்ளியில் விடுமுறை நாட்களில் வீட்டுப்பாடம் இல்லை. சில பள்ளிகள் பாடங்களுக்குப் பின் வீட்டுப்பாடத்தில் உதவும் வகையில் ஆதரவு அளிக்கிறது

### மதிப்பீடு
தொடக்கப் பள்ளியின் இரண்டாம் ஆண்டு முதல், பள்ளி ஆண்டின் இறுதியில் பெரும்பாலான பாடங்களில் பள்ளி அடைவுகள் பள்ளி அறிக்கையின் தரத்தின் மூலம் மதிப்பிடப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளியில், ஒவ்வொரு செமிஸ்டரின் முடிவிலும் ஒரு பள்ளி அறிக்கை வழங்கப்படும். சிறந்த தரம் 6, மோசமான தரம் 1. பள்ளி அறிக்கை தரம் என்பது ஒட்டுமொத்த மதிப்பீட்டின் முடிவாகும், அதனைத் தேர்வு மதிப்பெண்களின் சராசரியுடன் ஒப்பிட முடியாது. பள்ளி ஆண்டில், ஆசிரியர் உங்கள் குழந்தையின் செயல்திறனை வெவ்வேறு வழிகளில் மதிப்பிடுகிறார். கருத்துகளை ஒரு தரத்தின் மூலமாகவோ, வாய்மொழியாகவோ அல்லது வேறு விதமாகவோ வழங்கலாம்.

மதிப்பீட்டுக் கூட்டத்தின் போது, ஆசிரியர் உங்கள் குழந்தையின் பள்ளிச் செயல்திறன் மற்றும் கற்றல் முன்னேற்றம் குறித்து உங்களுடன் கலந்துரையாடுவார். பள்ளியிலும் பள்ளி வாழ்க்கையிலும் வெற்றிக்கு முக்கியமான பிற பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்படும். உதாரணமாக, குழந்தையின் நடத்தை, விடாமுயற்சி மற்றும் கவனக் குவிப்பு ஆகியவை இதில் அடங்கும். இந்த மதிப்பீட்டுக் கூட்டம் குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையாவது நடைபெறும். இதற்கு வருகை தருவது கட்டாயமாகும். இந்தக் கூட்டத்தின் போது, உங்கள் குழந்தை பள்ளியில் எப்படிச் செயல்படுகிறது, எப்படி முன்னேறுகிறது என்பதைப் பற்றி நீங்கள் மேலும் அறிந்து கொள்வீர்கள். வீட்டில் உங்கள் குழந்தையுடனான உங்கள் அனுபவங்களைப் பற்றி ஆசிரியர் கேட்பதிலும் ஆர்வம் காட்டுவார். கூடுதலாக, பள்ளி ஆண்டின் இறுதியில் அடுத்த வகுப்புக்கு அல்லது பள்ளி நிலைக்கு மாறுவது குறித்து கலந்துரையாடுவீர்கள்.

## அறிவது நல்லது

காண்டன் ஆ்்ப் செயிண்ட்.கேலனில் உள்ள குழந்தைகளும், இளயவர்களும் தேசிய மொழியான ஜெர்மானிய மொழியை கற்பார்கள். இது இங்கு வசதியாக இருக்கவும் நல்ல கல்வியைப் பெறவும் உதவும். அதே சமயம், அவர்களின் தாய்மொழியை அவர்கள் பயன்படுத்துவதும் மிகவும் உதவிகரமாக இருக்கும் இது அவர்களுக்கு மற்ற மொழிகளைக் கற்கவும் உதவும். எனவே, உங்கள் குழந்தையிடம் உங்கள் சொந்த மொழியிலேயே அதிகம் பேசுங்கள். அதே சமயம், அவர்கள் ஜெர்மன் கற்பதற்கு உதவுங்கள் மற்றும் அக்கம் பக்கத்தில்,விளையாட்டு மைதானத்தில்,பிளே க்ரூப்பில் அல்லது டே கேர் மையத்தில். உள்ள ஜெர்மன் பேசும் நண்பர்களை கண்டுபிடிக்க உதவுங்கள்.

இந்த தலைப்பில் மேலும் விவரங்களை இங்கு பெறலாம்.

→ www.integration.sg.ch
→ Frühe Förderung und Elternbildung → Elternbildung

## மொழி

கிண்டர்கார்டனில், வழக்கு மொழியே தொடர்பு கொள்ளவும் மற்றும் கற்றுக்கொடுக்கும் மொழியாகும். பிரைமரி மற்றும் செகண்டரி பள்ளியில் தூய ஜெர்மானிய மொழி. ஜெர்மன் மொழி சரியாக பேச வராத மாணவர்கள் சிறிது காலம் கூடுதல் ஜெர்மனி வகுப்பில் இருப்பார்கள்.

கட்டாயப் பள்ளி பாடங்களுக்கு கூடுதலாக, தாய் மொழி மற்றும் கலாச்சார வகுப்புகள் இருக்கிறது (என் எல் சி) அங்கு குழந்தைகள் மற்றும் இளயவர்கள் அவர்களின் சொந்த மொழியில் படிக்கவும், எழுதவும், பேசவும் பயிற்சி பெறுவார்கள். என் எல் சி பாடங்கள், தூதரகங்களாலும் அல்லது சங்கங்களாலும் நடத்தப்படுகின்றன. இங்கு தானாக முன் வந்து படிக்கலாம். சலுகை மற்றும் நேர அட்டவணை குறித்த தகவல்களை கீழே பார்க்கலாம்.

→ www.hsk-sg.ch

## பள்ளியுடன் ஒத்துழைப்பது

பெற்றோர்கள் மாலை மற்றும் இதர பள்ளி நிகழ்வுகளில் பள்ளி வாழ்க்கை மற்றும் தற்போதைய தலைப்புகள் குறித்த ஒரு தெளிவு உங்களுக்கு கிடைக்கும். நீங்கள் பங்கேற்பது மிக முக்கியம். உங்கள் குழந்தையுடன் நீங்களும் பாடங்களை கற்கலாம். விசிட்டிங் நாட்கள் வருடத்திற்கு ஒரு முறை ஏற்பாடு செய்யப்படும்.

உங்கள் குழந்தை பள்ளிக்கு வருவதும், பள்ளியின் விதிகளுக்கு ஏற்ப நடப்பதும் பெற்றோர்களாகிய உங்கள் பொறுப்பாகும். கூடுதலாக, விவாதத்தில் கலந்து கொள்ளவோ அல்லது மற்ற தொடர்புகளுக்கோ, ஆசிரியர் அல்லது பள்ளி கூப்பிடும்போது நீங்கள் வர வேண்டும். நல்ல ஒத்துழைப்பு, உங்கள் குழந்தை பள்ளியில் வசதியாக இருப்பதை உறுதி செய்ய உதவும்.

## தொடர்பு நபர்

உங்களுக்கு ஏதாவது கேள்விகளோ அல்லது அக்கறையோ இருந்தால் தயவுசெய்து உங்கள் குழந்தையின் ஆசிரியரை நேரடியாக தொடர்பு கொள்ளவும். பேசுவதற்கோ அல்லது நிகழ்வுக்கோ உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால் அவரிடம் தெரியப்படுத்தவும்.

பிரச்சனைகள் எழுமானால், பள்ளி மனோதத்துவ சேவை அல்லது பள்ளி சமூக சேவகர்களின் ஆலோசனையும் ஆதரவும் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் கிடைக்கும்.





Stand Dezember 2025